அகில பாரத சங்கர ஸேவா ஸமிதி வெளியீடு

॥ श्रीः ॥

"एषा शंकरभारती विजयते निर्वाणसौख्यप्रदा"

ஏஷா ஶங்கரபா⁴ரதீ விஜயதே நிர்வாணஸௌக்²யப்ரதா³

श्रीजगद्गुरुग्रन्थमाला

ஸ்ரீ ஜக³த்³கு³ரு க்³ரந்த²மாலா

॥ श्रीगणेशपञ्चरत्नम् ॥

ஸ்ரீ க³ணேஶ பஞ்சரத்னம்

ஸ்ரீ வாணீவிலாஸ் பிரஸ்
ஸ்ரீரங்கம்.
1961

॥ श्रीगुरुभ्यो नमः ॥

॥ समर्पणम् ॥

श्रीमच्छंकरदेशिकस्य महिता मूर्तिद्वयी या स्थिता
तत्रैका हि तिरोबभूव विजने केदारनाथस्थले ।
अन्या वर्णमयी तु भाष्यनिचयस्तोत्रप्रबन्धात्मना
सर्वत्रैव समुज्वला विजयते ताभ्यां तनुभ्यां नमः ॥ १ ॥

यस्तत्रास्ति लघुप्रबन्धनिचयः स्तोत्राणि भूयांसि वा
तेषां द्राविडभाषयाऽनुवदनं विद्वद्वरैः कारितम् ।
श्रीमच्छंकरसेविनी सुसमितिः सम्यक्प्रकाश्याधुना
विद्यातीर्थपदे समर्पयति तत् लोकोपकारक्षमम् ॥ २ ॥

शंकरगुरुसंस्थापितसर्वजगद्वन्द्यशारदापीठम् ।
शंकरसेवासमितिः प्रकरणमालार्पणादलंकुरुते ॥ ३ ॥

शंकरगुरुवररचितप्रकरणमालां शुभानुवादयुताम् ।
शंकरपरंपरागतविद्यातीर्थे समार्पिपत्समितिः ॥ ४ ॥

शंकरसेवारसिकाः शांकरसिद्धान्तसारसर्वस्वम् ।
शंकरसेवासमितिप्रकटनमालां सदाऽपि सेवन्ताम् ॥ ५ ॥

பதிப்புரை

ஸ்ரீ சிருங்கேரி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சாரதா பீடாதிபதிகளின் அனுக்ரஹத்தினுல் அமைக்கப்பட்ட அகில பாரத சங்கர ஸேவா ஸமிதியின் முக்கிய நோக்கம் ஸ்ரீ பகவத்பாதாளின் க்ரந்தங்களை அநுவாதத்துடன் பிரசுரித்து குறைந்த விலையில் எல் லோருக்கும் கிடைக்கும்படி செய்து ஆசார்யாளுடைய உபதேசங்களை எங்கும் பரவ ச்செய்வதே. இந்நோக்கத்துடன் பிரசுரிக்கப்படும் "**ஸ்ரீ ஜகத்குரு க்ரந்தமாலா**" வின் '**ஸ்ரீ க³ணேஶ பஞ்சரத்னம்**' இது.

அத்வைத ஸித்தாந்தத்தை யாவரும் புரிந்து ஸ்வாநுபவம் பெற பாஷ்யங்க ளையும் பிரகரணங்களையும் இயற்றிய பகவத் பாதர்கள் அந்நிலையை அடையமுடி யாதவர்களும் கிரமமாக சிரேயஸ்ஸை அடைய எல்லா தேவதா மூர்த்திகள் பேரி லும் ஸ்தோத்ர்ரிங்களை அருளியிருக்கிறார்கள். எல்லா தேவதா மூர்த்திகளும் ஒரே பரப்ரஹ்மத்தின் உருவம் என்பது தான் ஸித்தாந்தம். எந்த தேவதையை வழிபட் டாலும் அவர் அநுக்ரஹத்தால் முடிவில் அடையும் ஸ்தானம் முக்தி என்ற பரமா னந்த நிலையே. அவரவர் ருசிக்குத் தக்கபடி அந்தந்த தேவதையை வழிபட்டு அரு ளைப்பெற இந்த ஸ்தோத்திரங்கள் மிகவும் உபயோகமாக இருக்கும். பாராயணம் செய்வதற்கு ஏற்ற முறையில் லலிதமான பதங்களுடன் அமைந்துள்ள இந்த ஸ்தோத்திரங்களில் அந்தந்த தேவதைகளின் விசேஷ மஹிமைகளும் பல உயரிய கருத்துக்களும் நன்கு காட்டப்பட்டிருக்கின்றன. முக்கியமாக ஒவ்வொரு மூர்த்தி யையும் நிர்விசேஷ பரப்ரஹ்மமாக வர்ணித்து பிரகரணங்களில் கூறப்பட்ட வேதா ந்த தத்துவங்களும் ஆங்காங்கு காட்டப்படுகின்றன.

இவை தமிழ் அநுவாதத்துடனும் விரிவுடையுடனும் யாவருக்கும் உபயோகப் படும் வகையில் ஸமிதியால் வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்த ஸ்தோத்திரங்களில் பொதிந்துள்ள கருத்துக்களைத் தெரிந்து பக்தியுடன் பாராயணம் செய்வதால் ஸ்ரீ ஆசார்ய அநுக்ரஹத்துடன் எல்லா அபீஷ்டங்களையும் பெறலாம்.

K.V. சுப்பரத்னம்,
பொதுக் காரியதரிசி,
அகில பாரத சங்கர ஸேவா ஸமிதி.

உ

॥ श्रीगणेशाय नमः ॥

ஶ்ரீ க³ணேஶாய நமঃ

॥ श्रीगणेशपञ्चरत्नम् ॥

ஶ்ரீ க³ணேஶ பஞ்சரத்னம்

ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்யர் அருளியது.

[ஸ்ரீ சங்கரபகவத்பாதர் அருளிய கணேச பஞ்சரத்னம் என்னும் இந்த ஸ்தோத்திரம் ஐந்துசுலோகங்கள் கொண்டது. 6வது சுலோகத்தில் இதைப்படிப்பதால் ஏற்படும் பலன்களைக் காட்டுகிறுர். விநாயகருடைய பெருமைகளை விளக்கும் இந்த ஸ்தோத்திரம் அழகிய விருத்தத்தில் அமைந்திருப்பதால் யாவருக்கும் படிப்பதில் உத்ஸாஹத்தைத் தரக்கூடியது.

'एकं सत विप्रा बहुधा वदन्ति'

'ஏகம் ஸத விப்ரா ப³ஹுதா⁴ வத³ந்தி'

ஒரே ப்ரஹ்மதத்வம் பல தேவதா மூர்த்திகளாக விளங்குகிறது. பெயரும் உருவமும் வெவ்வேறுக இருந்தாலும் தத்வம் ஒன்றுதான். இதுதான் உபநிஷத்தில் கூறப்பட்ட அத்வைத ஸித் தாந்தம் இதை அனுஸரித்து ஸ்ரீபகவத்பாதர் தம்முடைய ஒவ்வொரு ஸ்தோத்திரத் திலும் அந்தந்த தேவதா மூர்த்தியை ஸகல ஜகத்காரணமான பரமாத்ம ஸ்வரூப மாகவே வர்ணிக்கிறுர்.]

मुदा करात्त मोदकं सदा विमुक्ति साधकं
कलाधरावतंसकं विलासिलोक रक्षकम् ।
अनायकैक नायकं विनाशितेभ दैत्यकं
नताशुभाशुनाशकं नमामि तं विनायकम् ॥ १ ॥

ஶ்ரீ க3ணேஶ பஞ்சரத்னம்

முதா3 கராத்தமோத3கம் ஸதா3 விமுக்தி ஸாத4கம்
கலாத4ராவதம்ஸகம் விலாஸி லோக ரக்ஷகம் ।
அநாயகைக நாயகம் விநாஶிதேப4 தை3த்யகம்
நதாஶுபா4ஶுநாஶகம் நமாமி தம் விநாயகம் ॥ 1 ॥

मुदा **முதா3**	=	ஸந்தோஷத்துடன்,
करात्त मोदकं **கராத்தமோத3கம்**	=	கையில் கொழுக்கட்டையை வைத்துக் கொண்டிருப்பவரும்,
सदा **ஸதா3**	=	எப்பொழுதும்,
विमुक्ति साधकं **விமுக்தி ஸாத4கம்**	=	முக்திக்கு ஸாதகமாயிருப்பவரும்,
कलाधरावतंसकं **கலாத4ராவதம்ஸகம்**	=	சந்திரனை சிரஸில் அலங்காரமாகக்கொண்டவரும்,
विलासिलोक रक्षकम् **விலாஸி லோக ரக்ஷகம்**	=	நாகலோகத்தைக் காப்பாற்றுபவரும்,
अनायक **அநாயக**	=	(தனக்குமேல்) நாயகர் இல்லாதவரும்,
एकनायकं **ஏகநாயகம்**	=	(தானே உலகிற்கு) ஒரே நாயகராக இருப்பவரும்,
विनाशितेभ दैत्यकं **விநாஶிதேப4 தை3த்யகம்**	=	கஜாஸுரனைக் கொன்றவரும்,
नताशुभाशुनाशकं **நதாஶுபா4ஶுநாஶகம்**	=	வணங்கியவர்களின் தீமைகளை விரைவில் அழிப்பவருமான,
तं **தம்**	=	அந்த,
विनायकं **விநாயகம்**	=	விநாயகரை,
नमामि **நமாமி**	=	வணங்குகிறேன்.

கையில் கொழுக்கட்டையுடன் சிரஸில் சந்திரனுடன் ஆனந்தமாக இருக்கும் கணேசமூர்த்தியை தியானிக்கிறார். அவர் ஆனந்தமாக இருப்பதால் நமக்கும் பரமானந்தமான முக்தியைத் தருகிறார். இதுமட்டும் அல்ல. அவரை வணங்கினால், நமக்கு ஏற்படும் எல்லாத் துன்பங்களையும் விலக்கி நன்மையைத் தருவார். உலகுக்குத் தீங்கு செய்த கஜாஸுரனைக் கொன்று காப்பாற்றியவர். அவரே ஜகத் காரணமான பரமாத்மா. அவருக்கு மேற்பட்டவர் ஒருவரும் இல்லை. ஸர்ப்பங்களைக் காப்பாற்று

வதுடன் அவைகளினின்று நம்மையும் காப்பாற்றுபவர். இந்த விநாயகரை வணங்கு கிறேன். (1)

नतेतरातिभीकरं नवोदितार्कभास्वरं
नमत्सुरारिनिर्जरं नताधिकापदुद्धरम् ।
सुरेश्वरं निधीश्वरं गजेश्वरं गणेश्वरं
महेश्वरं तमाश्रये परात्परं निरन्तरम् ॥ २ ॥

நதேதராதி பீ⁴கரம் நவோதி³தார்க பா⁴ஸ்வரம்
நமத்ஸுராரி நிர்ஜரம் நதாதி⁴காபது³த்³த⁴ரம் ।
ஸுரேஶ்வரம் நிதீ⁴ஶ்வரம் க³ஜேஶ்வரம் க³ணேஶ்வரம்
மஹேஶ்வரம் தமாஶ்ரயே பராத்பரம் நிரந்தரம் ॥ 2 ॥

नतेतरातिभीकरं நதேதராதி பீ⁴கரம்	=	வணங்காதவர்களுக்கு மிகுந்த பயத்தைச் செய்கிறவரும்,
नवोदितार्क நவோதி³தார்க	=	புதிதாக உதயமாகும் சூரியன் போல்,
भास्वरं பா⁴ஸ்வரம்	=	ஒளி பொருந்தியவரும்,
नमत्सुरारिनिर्जरं நமத்ஸுராரி நிர்ஜரம்	=	வணங்கும் அஸுரர்களையும் தேவதைகளையும் உடையவரும்,
नताधिकापदुद्धरम् நதாதி⁴காபது³த்³த⁴ரம்	=	வணங்குபவர்களின் அதிகமான துன்பங்களையும் நீக்குபவரும்,
सुरेश्वरं ஸுரேஶ்வரம்	=	தேவர்களுக்குத் தலைவரும்,
निधीश्वरं நிதீ⁴ஶ்வரம்	=	நிதிகளுக்கு யஜமானரும்,
गजेश्वरं க³ஜேஶ்வரம்	=	யானைகளுக்கு ஈசுவரனும்,
महेश्वरं மஹேஶ்வரம்	=	மஹேசுவரனும்,
परात्परं பராத்பரம்	=	உயர்ந்தவர்களுக்கும் உயர்ந்தவருமான,
गणेश्वरं க³ணேஶ்வரம்	=	கணபதியை,
निरन्तरम् நிரந்தரம்	=	இடைவிடாமல்,

तमाश्रये = ஆச்ரயிக்கிறேன்.
தமாஶ்ரயே

உதயசூரியனைப்போல ஒளியுடன் விளங்குபவர். தேவர்களும் அஸுரர்களும் தங்கள் காரியம் இடையூரின்றி நிறைவேற இவரை வணங்குகின்றனர். இவரை வணங்காதவர் மிகுந்த பயத்தால் துன்புறுவர். வணங்குபவர்களுக்கு எவ்வித ஆபத்துக்களும் விலகும். பூதகணங்களின் பாதை இருக்காது. தேவர்களின் அருளும் எல்லா ஐசுவர்யங்களும் கிடைக்கும். எல்லாவற்றிற்கும் மேற்பட்ட ஈசுவரன் இவர். (2)

समस्त लोकशंकरं निरस्त दैत्यकुञ्जरं
दरेतरोदरं वरं वरेभवक्त्रमक्षरम् ।
कृपाकरं क्षमाकरं मुदाकरं यशस्करं
मनस्करं नमस्कृतां नमस्करोमि भास्वरम् ॥ ३ ॥

ஸமஸ்த லோக ஶங்கரம் நிரஸ்த தை³த்ய குஞ்ஜரம்
த³ரேதரோத³ரம் வரம் வரேப⁴ வக்த்ர மக்ஷரம் ।
க்ருபாகரம் க்ஷமாகரம் முதா³கரம் யஶஸ்கரம்
மனஸ்கரம் நமஸ்க்ருதாம் நமஸ்கரோமி பா⁴ஸ்வரம் ॥ 3 ॥

समस्त लोकशंकरं = எல்லா உலகங்களுக்கும் க்ஷேமத்தைக் கொடுப்பவரும்,
ஸமஸ்த லோக ஶங்கரம்

निरस्त दैत्यकुञ्जरं = கஜாஸுரனைக் கொன்றவரும்,
நிரஸ்த தை³த்ய குஞ்ஜரம்

दरेतरोदरं = பெரும் வயிறு உள்ளவரும்,
த³ரேதரோத³ரம்

वरं = சிறந்தவரும்,
வரம்

अक्षरम् = அழிவற்றவரும்,
அக்ஷரம்

नमस्कृतां = வணங்குபவர்களுக்கு,
நமஸ்க்ருதாம்

कृपाकरं = தயை புரிபவரும்,
க்ருபாகரம்

क्षमाकरं = பொறுத்துக்கொள்பவரும்,
க்ஷமாகரம்

मुदाकरं = ஸந்தோஷத்தைச் செய்பவரும்,
முதா³கரம்

यशस्करं = புகழைக் கொடுப்பவரும்,

யஶஸ்கரம்

मनस्करं = நல்மனதைச் செய்பவரும்,

மனஸ்கரம்

भास्वरम् = ஒளி பொருந்தியவரும்,

பா⁴ஸ்வரம்

वरेभवक्त्रं = சிறந்த யானைமுகம் கொண்ட கணபதியை,

வரேப⁴வக்த்ரம்

नमस्करोमि = வணங்குகிறேன்.

நமஸ்கரோமி

யானை முகமும் பெரும் வயிறும் கொண்ட கணேசரை வணங்குபவர்களுக்கு மனம் நிர்மலமாவதோடு புகழும் ஸந்தோஷமும் உண்டாகும். இரக்கம் காட்டி செய்த குற்றங்களைப் பொறுத்துக்கொள்வார். கஜாஸுரனைத் தொலைத்து உலகிற்கு நன்மை செய்தவர். (3)

अकिंचनार्तिमार्जनं चिरन्तनोक्तिभाजनं
पुरारिपूर्वनन्दनं सुरारिगर्व चर्वणम् ।
प्रपञ्चनाशभीषणं धनञ्जयादिभूषणं
कपोलदानवारणं भजे पुराणवारणम् ॥ ४ ॥

அகிஞ்சனார்தி மார்ஜனம் சிரந்தனோக்தி பா⁴ஜனம்
புராரி பூர்வநந்த³னம் ஸுராரிக³ர்வ சர்வணம் ।
ப்ரபஞ்ச நாஶபீ⁴ஷணம் த⁴னஞ்ஜயாதி³ பூ⁴ஷணம்
கபோல தா³ன வாரணம் ப⁴ஜே புராணவாரணம் ॥ 4 ॥

अकिंचनार्तिमार्जनं = ஏழைகளின் துன்பங்களைத் துடைப்பவரும்,

அகிஞ்சனார்தி

चिरन्तनोक्तिभाजनं = பழமைச் சொல்லான வேதத்தை இருப்பிடமாகக்

சிரந்தனோக்தி பா⁴ஜனம் கொண்டவரும்,

पुरारिपूर्वनन्दनं = த்ரிபுரர்களை அழித்த பரமசிவனுடைய

புராரி பூர்வநந்த³னம் மூத்த புதல்வரும்,

सुरारिगर्व चर्वणम् = அஸுரர்களின் செருக்கைத் தொலைப்பவரும்,

ஸுராரிக³ர்வ சர்வணம்

प्रपञ्चनाशभीषणं = உலகு அழியும்பொழுது (பிரளயத்தில்)

ப்ரபஞ்ச நாஶபீ⁴ஷணம் பயங்கரமாக இருப்பவரும்,

धनञ्जयादिभूषणं = தனஞ்ஜயன் முதலான ஸர்ப்பங்களை

த⁴னஞ்ஜயாதி³ பூ⁴ஷணம் அணிகளாகக் கொண்டவரும்,

कपोलदानवारणं **கபோல தா³ன வாரணம்**	=	கன்னத்தில் மதஜல்ப்பெருக்கை உடையவரும்,
पुराणवारणम् **புராணவாரணம்**	=	பழமையான யானை உருவம் கொண்ட கணபதியை,
भजे **ப⁴ஜே**	=	ஸேவிக்கிறேன்.

ஏழைகளுக்கு எல்லா ஐசுவர்யங்களையும் கொடுத்துத் துன்பங்களைப் போக்கு பவர். ஈசுவரனுடைய மூத்த புதல்வர். ஸ்கந்தருக்கு அண்ணு. பாம்புகளை அணிகளாக க்கொண்டு கன்னங்களில் மதஜலம் பெருக நிற்கும் கணபதி அசுரர்களுக்குத் தோல் வியைக்கொடுத்து அவர்களுடைய கர்வத்தை அடக்குபவர். பிரளய காலத்தில் பயங்கர உருவத்துடன் பிரபஞ்சத்தை அழிக்கும் அனுதியான இவருடைய மஹிமை யை மிகப்பழமையான வேதங்களில் தான் காணமுடியும். (4)

नितान्तकान्तदन्तकान्तिमन्तकान्तकात्मजं
अचिन्त्यरूपमन्तहीनमन्तरायकृन्तनम् ।
हृदन्तरे निरन्तरं वसन्तमेव योगिनां
तमेकदन्तमेव तं विचिन्तयामि सन्ततम् ॥ ५ ॥

நிதாந்த காந்த த³ந்த காந்திமந்தகாந்தகாத்மஜம்
அசிந்த்யரூப மந்தஹீன மந்தராயக்ருந்தனம் ।
ஹ்ருத³ந்தரே நிரந்தரம் வஸந்தமேவ யோகி³னும்
தமேகத³ந்தமேவ தம் விசிந்தயாமி ஸந்ததம் ॥ 5 ॥

नितान्तकान्त **நிதாந்த காந்த**	=	மிகவும் அழகிய,
दन्तकान्तिं **த³ந்தகாந்திம்**	=	பற்களின் ஒளியுள்ளவரும்,
अन्तकान्तकात्मजं **அந்தகாந்தகாத்மஜம்**	=	யமனுக்கும் யமனுன சிவனுடைய பிள்ளையும்,
अचिन्त्यरूपं **அசிந்த்யரூபம்**	=	ஊஹிக்க முடியாத ஸ்வரூபம் உள்ளவரும்,
अन्तहीनं **அந்தஹீனம்**	=	அழிவற்றவரும்,
अन्तरायकृन्तनं **அந்தராயக்ருந்தனம்**	=	இடையூறுகளைப் போக்குபவரும்,
योगिनां **யோகி³னும்**	=	யோகிகளின்,

हृदन्तरे एव = ஹிருதய மத்தியிலேயே,

ஹ்ருத³ந்தரே ஏவ

निरन्तरं = இடைவிடாமல்,

நிரந்தரம்

वसन्तं = வஸிக்கின்றவருமான,

வஸந்தம்

तं = அந்த,

தம்

एकदन्तमेव = ஒரு கொம்புள்ள கணேசரையே,

ஏகத³ந்தமேவ

सन्ततं = எப்பொழுதும்,

ஸந்ததம்

विचिन्तयामि = தியானிக்கிறேன்.

விசிந்தயாமி

ஒற்றைக்கொம்பரான கணேசரின் பற்கள் அழகும் ஒளியும் பொருந்தியவை. அவருக்கு அழிவு கிடையாது. நம் இடையூறுகளைப் போக்குவார். இவர் தந்தை யமனைக் காலால் உதைத்தவர். இவரை அண்டினால் மிருத்யு பயம் விலகும். மனத்தை அடக்காதவர் இவர் தத்வத்தை அறிய முடியாது. வெளி விஷயங்களில் போகவொட்டாமல் மனதைத் தடுத்து தியானிப்பவர்களின் ஹிருதயத்தில் எப்பொழுதும் வாஸம் செய்வார். **(5)**

महागणेशपञ्चरत्नमादरेण योऽन्वहं
प्रजल्पति प्रभातके हृदि स्मरन्गणेश्वरम् ।
अरोगतामदोषतां सुसाहितीं सुपुत्रतां
समाहितायुरष्टभूतिमभ्युपैति सोऽचिरात् ॥ ६ ॥

மஹாக³ணேஶ பஞ்சரத்னமாத³ரேண யோ(அ)ன்வஹம்
ப்ரஜல்பதி ப்ரபா⁴தகே ஹ்ருதி³ ஸ்மரன் க³ணேஶ்வரம் ।
அரோக³தாமதோ³ஷதாம் ஸுஸாஹிதீம் ஸுபுத்ரதாம்
ஸமாஹிதாயுரஷ்டபூ⁴திமப்⁴யுபைதி ஸோ(அ)சிராத் ॥ 6 ॥

यः = எவன்,

யஃ

अन्वहं = தினந்தோறும்,

அன்வஹம்

प्रभातके = காலையில்,

ப்ரபா⁴தகே

हृदि = மனத்தில்,
ஹ்ருதி³
गणेश्वरं = கணபதியை,
க³ணேஸ்வரம்
स्मरन् = நினைத்துக் கொண்டு,
ஸ்மரன்
आदरेण = பக்தியுடன்,
ஆத³ரேண
महागणेशपञ्चरत्नं = கணேச பஞ்சரத்னத்தை,
மஹாக³ணேஶபஞ்சரத்னம்
प्रजल्पति = சொல்கிறானோ,
ப்ரஜல்பதி
सः = அவன்,
ஸ:
अरोगतां = ஆரோக்யத்தையும்,
அரோக³தாம்
अदोषतां = குற்றமில்லாத் தன்மையையும்,
அதோ³ஷதாம்
सुसाहितीं = நல்லகவித்திறனையும்,
ஸுஸாஹிதீம்
सुपुत्रतां = நல்ல தனயர்களையும்,
ஸுபுத்ரதாம்
समाहितायुः = நிறைந்த ஆயுளையும்,
ஸமாஹிதாயு:
अष्टभूतिं = அஷ்டைசுவர்யங்களையும்,
அஷ்டபூ⁴திம்
अचिरात् = விரைவில்,
அசிராத்
अभ्युपैति = அடைவான்.
அப்⁴யுபைதி

ஒவ்வொரு நாளும் காலையில் கணபதியை தியானித்துக் கொண்டு பக்தியுடன் இந்த ஸ்தோத்ரத்தைப் பாராயணம் செய்பவர்களுக்கு பிணியும் தோஷங்களும் விலகி நல்ல கவித்திறன், நல்ல பிள்ளைகள், நீண்ட ஆயுள், அஷ்டைசுவர்யங்கள் இவைகள் எல்லாம் விரைவில் கிடைக்கும். **(6)**